# அன்பின் உருவப்படம்



பாடம் 7 ஆகஸ்ட் 15, 2026

“இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.”
(1 கொரிந்தியர் 13:13)



1 கொரிந்தியர் 13 “அன்பின் அதிகாரம்” எனப்படும். இது காதல் அன்பை வரையறுக்கவில்லை, அதைவிட ஆழமான ஒரு வகையான அன்பையே வரையறுக்கிறது: அதுவே தெய்வீக அன்பு.

நம் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கும் தேவனுடைய அன்பை நம் வாழ்வில் எவ்வாறு வெளிப்படுத்துவது ன்பதைப் பவுல் மிக சிறப்பாக விளக்குகிறார் (ரோ. 5:5).



நமது அனைத்து செயல்களுக்கும் பின்னால் உள்ள உந்துசக்தி அன்பே, நாம் பழகும் மனிதர்களுக்குப் பயனளிக்கும் வகையிலான செயல்களை செய்வதற்கு அதுவே காரணமாக அமைகிறது.



## அன்பின் உருவப்படம்

- அன்பின் மேன்மை
  - மிகவும் சிறந்த வழி
- அன்பின் குணங்கள்
  - அன்பு என்ன செய்யும்
  - அன்பு என்ன செய்யாது
  - இயேசுவின் சித்திரம்
- அன்பின் விடாமுயற்சி
  - மிகச் சிறந்த குணங்கள்

# அன்பின் மேன்மை



# மிகச் சிறந்த வழி

"இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்." (1 கொரிந்தியர் 12:31)




1 கொரிந்தியர் 13-ல் பவுல் எந்த விதமான அன்பை முன்வைக்கிறார்? அது ஆவிக்குரிய எந்த வரத்தையும் ஏன் விஞ்சி நிற்கிறது? (1 கொ. 12:31-13:3)

கிரேக்க மொழியில் அன்பைக் குறிக்க பல சொற்கள் உண்டு. பவுல் *அகாபே* என்பதைத் தேர்ந்தெடுக்கிறார் (சுயநலமற்ற, நிபந்தனையற்ற, நேசிக்கப்படுகிறவரின் நன்மையை மட்டுமே நாடுகிற அன்பு); "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8) என்று யோவான் சொல்லும்போது பயன்படுத்துகிற அதே சொல் இதுவே.



இந்த விதமான அன்பினால் ஏவப்பட்டு பயன்படுத்தப்படாவிட்டால், ஆவிக்குரிய எந்த வரமும் பயனற்றது. உண்மையில், நமது எல்லாச் செயல்களும் எண்ணங்களும் *அகாபே* அன்பினால் நிறைந்திருக்க வேண்டும்.



அக்கிரமம் பெருகுவதால் இந்த அன்பு தணிந்துபோகும் என்று இயேசு எச்சரித்தார் (மத்தேயு 24:12). ஆனால் நம்மிலோ, நம் வீடுகளிலோ, நம் சபைகளிலோ இது நிகழ இடங்கொடுக்கலாகாது.

# அன்பின் குணங்கள்

# அன்பு என்ன செய்யும்?

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்." (1 கொரிந்தியர் 13:4-7)

| | | |
|---|---|---|
| நீடிய சாந்தம் உள்ளது | *மக்ரோதைமேயோ:* நீண்ட ஆவியுள்ளவராய் இருத்தல், சகித்தல், பொறுமையாய் இருத்தல் | பொறுமை காட்டி, மற்றவர்களின் தவறுகளைச் சகித்துக்கொள்ளுங்கள் |
| தயவுள்ளது | *இரஸ்டியுமேய்:* நன்மையாய் நடந்துகொள்ளுதல் | இரக்கமும் மனதுருக்கமும் உள்ளது |
| சத்தியத்தில் சந்தோஷப்படும் | *சின்ஜைரோ:* அனுதாபம் தெரிவித்தல், வாழ்த்துதல் | சத்தியத்தை ஆதரிக்கிறவர்களோடு சேர்ந்து சந்தோஷப்படும் |
| சகலத்தையும் தாங்கும் | *ஸ்டிஜோ:* அமைதியால் மறைத்தல் (பொறுமையாய்ச் சகித்தல்) | மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்தாமல் மறைத்து, அமைதி காத்து கொள்ளுங்கள் |
| சகலத்தையும் விசுவாசிக்கும் | *பிஸ்டியோ:* விசுவாசம் வைத்தல், நம்புதல், சார்ந்திருத்தல் | குற்றம் தீர்க்காமல், சந்தேகத்தின் பயனை அளிக்கும் |
| சகலத்தையும் நம்பும் | *எல்பிஸோ:* எதிர்பார்த்திருத்தல் அல்லது நம்புதல் | நல்லது நடக்கும் என்று எப்போதும் எதிர்பாருங்கள் |
| சகலத்தையும் சகிக்கும் | *ஹிப்போமெனோ:* எதிர்த்து நிற்றல், சகித்தல், மனஉறுதி கொள்ளுதல், நிலைத்திருத்தல் | கஷ்டங்களையும் சோதனைகளையும் உபத்திரவங்களையும் சகியுங்கள் |



# அன்பு என்ன செய்யாது?

"[...] அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். [...]" (1 கொரிந்தியர் 13:4-7)



| | | |
|---|---|---|
| பொறாமைப் படாது | *ஸிலூ*: எரிச்சலான உணர்வு கொள்ளுதல் | வேறு வரங்களோ நற்குணங்களோ உள்ளவர்கள்மேல் பொறாமை கொள்ளாது |
| தன்னைப் புகழாது | *பேர்பெரேயுமெய்*: தற்பெருமை பேசுதல், வீம்பு பேசுதல் | மற்றவர்களால் புகழப்பட விரும்பாது |
| இறுமாப்பாயிராது | *பிஸியு*: இறுமாந்து பெருமிதம் கொள்ளுதல் | தன்னைக் குறித்து மிகைப்படுத்திய எண்ணம் கொள்ளாது |
| அயோக்கியமானதைச் செய்யாது | *ஆஸ்ஜிமெனேயு*: முறையற்ற விதமாய் நடத்தல் | சமூக, ஒழுக்க நெறிகளுக்கு எதிராக நடக்காது |
| தற்பொழிவை நாடாது | *ஸிடியு*: தேடுதல் | மற்றவர்களின் நன்மைக்காகத் தன் உரிமைகளை விட்டுக்கொடுக்கும் |
| சினமடையாது | *பேரக்ஸினோ*: எரிச்சலையும் கோபத்தையும் உண்டாக்குதல், சினத்தை எழுப்புதல் | சீக்கிரம் கோபப்படுவதுமில்லை, மிகுந்த உணர்ச்சிவசப்படுவதுமில்லை |
| தீங்கு நினையாது | *லோகிஸோமெய்*: கணக்கு வைத்தல் | செய்யப்பட்ட அநியாயங்களை மன்னித்து மறந்துவிடும் |
| அநியாயத்தில் சந்தோஷப்படாது | *ஜைரோ*: மகிழ்ச்சியாய், சந்தோஷமாய் இருத்தல் | தவறுகளில் சந்தோஷப்படாமல், அவற்றைத் திருத்த நாடும் |

# இயேசுவின் சித்திரம்

“நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ”
(யோவான் 15:12)

அடிகளையும்
நிந்தைகளையும்
அவமானத்தையும்
சகித்தார்
(மத். 27:27-31)

**அவர் நீடிய சாந்தமுள்ளவ
ர்**



துன்பப்பட்ட
ஒவ்வொருவரையும்
அவர் கவனித்தார்

**அவர் தயவுள்ளவர்**



தெளிவோடும்
உறுதியோடும்
சத்தியத்தைப்
போதித்தார்

**அவர் சத்தியத்தில் சந்தோஷப்படுகிறா
ர்**



பாவியான
ஸ்திரீயைக்
குற்றந்தீர்க்காமல்
மன்னிப்பு அளித்தார்
(யோவான் 8:10-11)

**அவர் சகலத்தையும் தாங்குகிறார்**



சகேயுவின்
உண்மைத்
தன்மையை
நம்பினார்
(லூக். 19:8-9)

**அவர் சகலத்தையும் விசுவாசிக்கிறார்**



“சாத்தியமற்ற” ஒரு
பணிக்காக 12
பேரை
ஆயத்தப்படுத்தினார்

**அவர் சகலத்தையும் நம்புகிறார்**



பசியையும்
புறக்கணிப்பையும்
வேதனையையும்
உபத்திரவத்தையும்
சகித்தார்

**அவர் சகலத்தையும் சகிக்கிறார்**



# இயேசுவின் சித்திரம்

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. " (யோவான் 15:12)

கனங்களை நாடாமல், தாழ்மையானவர்களோடு சேர்ந்திருந்தார்

அவர் பொறாமைப்படுவதில்லை



பிரபஞ்சத்தின் ராஜாவாயிருந்தும், அதைக்குறித்து பெருமை பாராட்டவில்லை

அவர் தம்மைப் புகழ்வதில்லை



மிகத் தாழ்மையான வேலைகளையும் செய்ய மனதாயிருந்தார்

அவர் இறுமாப்பாயிருப்பதில்லை



ஒவ்வொருவரையும் மரியாதையோடும் முறையோடும் நடத்தினார்

அவர் அயோக்கியமாய் நடப்பதில்லை



எப்போதும் தம் பிதாவின் சித்தத்தையே செய்தார் (யோவான் 6:38)

அவர் தற்பொழிவை நாடுவதில்லை



அவரை அடித்தபோதும், மரியாதையோடு பதிலளித்தார் (யோவான் 18:22-23)

அவர் சினமடைவதில்லை



தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக மன்னிப்பு கேட்டார் (லூக். 23:34)

அவர் தீங்கு நினைப்பதில்லை



அநீதியுள்ள பரிசேயரோடு கடினமாய்ப் பேசினார் (மத். 23:27-28)

அவர் அநியாயத்தில் சந்தோஷப்படுவதில்லை



# அன்பின் விடாமுயற்சி




# மிகச் சிறந்த குணங்கள்

"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது."
(1 கொரிந்தியர் 13:13)

கொரிந்தியர் தங்கள் நடத்தையால் அன்பு எதைச் செய்யாது என்பதைக் காட்டினார்கள்: அவர்கள் பொறாமை கொண்டார்கள்; தற்பெருமை பாராட்டினார்கள்; இறுமாப்புள்ளவர்களாய் இருந்தார்கள்; அயோக்கியமாய் நடந்தார்கள்; சுயநலமாய் இருந்தார்கள்; சீக்கிரம் சினமடைந்தார்கள்; தீங்கு நினைத்தார்கள்; பாவத்தைச் சகித்துக்கொண்டார்கள்

அவர்களைப்போல் அல்லாமல், ஆவிக்குரிய வரங்களைச் சரியாகப் பயன்படுத்த, பவுல் கற்பிக்கிறபடி இந்தக் குறைகளை விட்டுவிட்டு அன்பின் நற்குணங்களில் பெருக வேண்டும். விசுவாசம், நம்பிக்கை என்னும் மற்ற இரண்டு நற்குணங்களிலும் நிலைத்திருக்க அவர் அழைக்கிறார்.







இயேசு வரும்போது பாவம் ஒழிந்துபோகும்; அவரோடு நித்திய ஜீவனை அனுபவிப்போம். அப்பொழுது தீர்க்கதரிசனம், பாஷைகள், மற்ற வரங்கள், விசுவாசம், நம்பிக்கை ஆகியவை தேவையில்லாமல் போகும். ஆனால் அன்போ என்றென்றும் நிலைத்திருக்கும்
(1 கொரிந்தியர் 13:8).

“தேவன் அன்பாகவே இருக்கிறார். பிதாவினுடைய அன்பும் குமாரனுடைய அன்பும் ஒவ்வொரு விசுவாசியின் குணாதிசயமாகும். தேவ அன்பு மனிதனுக்கு அறிவிக்கப்படுகிற வழி தேவனுடைய வார்த்தையே. தேவனுடைய சத்தியமே அறிவை எட்டுகிற வழியாகும். தேவ கருவிகளோடு இணைந்து செயல்படுகிற மனிதனுக்குப் பரிசுத்த ஆவியானவர் அளிக்கப்படுகிறார். அது மனதையும் குணத்தையும் மாற்றி, அதரிசனமானவரைக் காண்கிறதுபோல மனிதன் சகித்திருக்கப் பெலப்படுத்துகிறது. சத்தியத்தை விசுவாசிப்பதன் மூலமும் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதன் மூலமுமே நிறைவான அன்பை அனுபவிக்க முடியும்.”

எலன்.ஜி.உவைட் (அவர் .பாதர் கேர்ஸ், அக்டோபர் 9)